Registered as a News Paper

பக்கங்கள் 04

விலை ரூபா: 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM PEOPLES DAILY மக்கள் தினசரி


நாதம்: 02 திருவள்ளுவர் ஆண்டு 2022 ஆவணி 20 ( 05 - 09 - 1991 ) வியாழக்கிழமை ஓசை: 199

## பத்து வயது சிறுவருக்கு விசேட வதிவிட அட்டை

மட்டக்களப்பு மாநகர எல்லைக்குள் வசிக்கும் பத்து வயதுக்கு மேற்பட்ட சகலருக்கும் விசேட வதிவிட அடையாள அட்டைகள் வழங்கப் படவுள்ளன.

இதற்கான உத்தரவை பாதுகாப்புப் படையினர் கிராமசேவையாளர்கள் மூலம் பிறப்பித்துள்ளனர்.

இதன்படி மட்டக்களப்பில் வசிக்கும் சகல பத்து வயதுக்கு மேற்பட்ட ஒவ்வொருவரும் இந்த விசேட அடையாள அட்டையைப் பெறல் வேண்டும் எனவும் இதற்காக அவர்கள் உரிய படிவத்தை பூர்த்தி செய்து மூன்று புகைப்படங்களை அதனுடன் சமர்ப்பிக்க வேண்டும் எனவும் கோரப்பட்டுள்ளது,



### இனப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண

# தமிழர் தாயகம், தேசியம், தன்னாட்சி; சிங்கள மக்கள் அங்கீகரிக்கவேண்டும்

## மணலாற்றில் கடும் மோதல்; ராணுவத்திற்கு பலத்த சேதம்

### தகவல் வெளியிட அரசாங்கம் மறுப்பு

(மணலாறு)

மணலாறு மாவட்டத்தில் தொடர்ந்தும் நான்காவது நாளாக சிறிலங்கா இராணுவத்திற்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் கடும் மோதல்கள் இடம்பெற்று வருவதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன இப்பகுதியில் உள்ள காட்டுப் பகுதிக்குள் புகமுனையும் இராணுவத்தை எதிர்த்து புலிகள் கடும் சண்டையிட்டு வருகின்றனர்.

இம் மோதலில் இராணுவ தரப்பில் பலத்த உயிரிழப்பு ஏற்பட்டதாக ஏஜென்சி செய்திகள் தெரிவிக்கின்றன அதே வேளை தமது தரப்பில் பன்னிரெண்டு இராணுவத்தினர் மட்டுமே கொல்லப்பட்டதாக சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

(4ஆம் பக்கம் பார்க்க)

## இறந்த உடலை மீட்கச் சென்ற இரு அதிரடிப்படை பலி; இருவர் படுகாயம்

(அக்கரைப்பற்று

மேலும் இருவர் படுகாய

## வீரவணக்கம்

சுமித்திரா,

ஜேம்ஸ்

## தலைவர் பிரபாகரன் பி. பி. ஸிக்கு பேட்டி

'தமிழ் மக்களின் தேசிய பிரச்சினையின் அடிப்படைகளான தமிழர் தாயகம், தமிழர் தேசியம், தமிழரின் தன்னாட்சி உரிமை ஆகியவற்றை முதலில் சிங்கள மக்கள் அங்கீகரிக்கவேண்டும். இந்த அங்கீகாரத்தின் அடிப்படையிலேயே இன ஒற்றுமை சாத்தியமாகும். அரசியல் தீர்விற்கும் வழி பிறக்கும்' இவ்வாறு தலைவர் பிரபாகரன் பி.பி.ஸிக்கு அளித்த பேட்டியில் கேள்வி ஒன்றிற்குப் பதிலளிக்கையில் தெரிவித்தார்.

அண்மையில் யாழ்ப்பாணம் வந்திருந்த பி. பி. ஸி நிருபர் கிறிஸ் மொறிஸ் தலைவர் பிரபாகரனிடம் எடுத்த பேட்டி நேற்று பி.பி.ஸியின் ஆசிய சேவையிலும், தமிழோசையிலும் ஒலிபரப்பாகியது.

மேலும் அவர் தனது பேட்டியில் கிழக்கு மாகாணத்தில் உள்ள இராணுவ நிலைமை மிகவும் சிக்கலானது இப்பகுதியில் பெரும்பான்மையாக தமிழ் மக்களும் மற்றும் சிங்கள. முஸ்லிம் மக்களும் வாழ்கிறார்கள். திருமலையிலும், அம்பாறையிலும் நிறைய சிங்களக் குடியேற்றங்கள் இருக்கின்றன. இவற்றைப் பாதுகாக்கும் நோக்கத்தோடு இப்பகுதிகளில் பெருந்தொகையில் இராணுவமும், பொலிஸும் குவிக்கப்பட்டிருக்கிறது. கிழக்கில் கடலோரமாகப் பெருமளவில் இராணுவ முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளன அப்படியிருந்தும் கிழக்கு மாகாணம் அரசின் கட்டுப்பாட்டில் இருப்பதாகக் கூறமுடியாது. கிழக்கில் எமது ஆயுத நடவடிக்கைகள் தொடர்ந்து நடக்கின்றன. எமது போராளிகள் எல்லா இடங்களிலும் நட

நீண்டகாலமாக கெரில்லாப்போர் முறையைக் கையாண்டு வந்த நாம் இப்போது மரபுவழி இராணுவமாக மாறிவருகின்றோம். இராணுவரீதியில் இது ஒரு பெரிய வளர்ச்சியைக் குறிக்கிறது. இந்த வளர்ச்சி எமது விடுதலைப் போராட்டத்தின் வளர்ச்சி தான். இந்த வளர்ச்சி எமது போராட்டத்தின் பெரும் திருப்புமுனையாகவும் அமைகிறது இந்த வளர்ச்சி மூலம் சிங்கள அரசு ஒரு பாடத்தை கற்றுக்கொள்ள வேண்டும் அதாவது இராணுவ நடவடிக்கை மூலம் தமிழ் மக்களின் தேசிய பிரச்சினைக்கு தீர்வுகாண முடியாது என்பது தான் அது.

### பலவந்தமாகசேர்ப்பதில்லை

★ கேள்வி: படையின் அளவு விரிவுபட்டுக்கொண்டு போகும் அதேவேளை சிறுவர்களையும் சிறுமியர்களையும் சேர்த்துக்கொள்வதாக கண்டனங்களும் குற்றச்சாட்டுக்களும்

தொடர்ந்தும் நான்காவது நாளாக சிறிலங்கா இராணுவத்திற்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் கடும் மோதல்கள் இடம்பெற்று வருவதாக அங்கிருந்து வரும்

பகுதிக்குள் புகமுனையும் இராணுவத்தை எதிர்த்து புலிகள் கடும் சண்டையிட்டு வருகின்றனர்.

இம் மோதலில் இராணுவ தரப்பில் பலத்த உயிரிழப்பு

வேளை தமது தரப்பில் பன்னிரெண்டு இராணுவத்தினர் மட்டுமே கொல்லப்பட்டதாக சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

(4ஆம் பக்கம் பார்க்க)

## வீரவணக்கம்

### சுமித்திரா, ஜேம்ஸ்

(நமதுநிருபர்)

மணலாறு மாவட்டத்தில் கடந்த திங்களன்று நடந்த நேரடி மோதலில் விடுதலைப் புலிகளைச் சேர்ந்த சுமித்திரா (தர்சினி நடராசா, வட்டக்கச்சி, கிளிநொச்சி) என்பவர் வீர மரணத்தைத் தழுவிக் கொண்டார்.

இதேமாவட்டத்தில் நேற்று முன்தினம் நடந்த நேரடி மோதலில் விடுதலைப் புலிகளைச்சேர்ந்த ஜேம்ஸ்(மட்டு நகர்) என்பவர் வீர மரணத்தைத் தழுவிக்கொண்டார்.

இவர்களுக்கு விடுதலைப் புலிகள் தமது வீர வணக்கத்தைத் தெரிவித்துக்கொண்டுள்ளனர்.

## இறந்த உடலை மீட்கச் சென்ற

## இரு அதிரடிப்படை பலி; இருவர் படுகாயம்

(அக்கரைப்பற்று

அம்பாறை மாவட்டத்திலுள்ள அக்கரைப்பற்றுப் பகுதியில் இறந்துகிடந்த ஒருவரின் உடலை அகற்றச் சென்ற இரண்டு விசேட அதிரடிப் படையைச் சேர்ந்த இருவர் கொலையுண்டனர்

மேலும் இருவர் படுகாயமடைந்தனர். இறந்தவரின் உடலருகே மறைந்து கிடந்த குண்டு வெடித்தமையே இச் சம்பவத்திற்கு காரணம்என்று தொலைபேசிச் செய்தியொன்றில் கொழும்புக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## மன்னாரில் அவ்ரோ பீப்பாக் குண்டு வீச்சு

மன்னார் மாவட்டத்தில் சிறிலங்கா விமானப் படையைச் சேர்ந்த அவ்ரோ விமானம் ஒன்று ஒன்பது பீப்பாக் குண்டுகளை வீசியுள்ளது.

இதில் பொற்கேணி என்னுமிடத்தில் ஐந்து குண்டுகளும், பதினோராம்கட்டை என்னுமிடத்தில் நான்கு குண்டுகளும் வீழ்ந்து வெடித்துள்ளன.

இத்தாக்குதலில் எவ்வித சேதமும் ஏற்பட்டதாகத் தெரிய வரவில்லை.

## ஜனாதிபதிக்கு எதிரான பிரேரணை ஏற்கமுடியாது

### - தொண்டமான்

(கொழும்பு)

தற்போது அரசாங்கக் கட்சியில் உள்ளவர்களின் எண்ணிக்கையைக் கணக்கிட்டுப் பார்க்கும்போது அரசியல் நெருக்கடி தற்பொழுது தீர்ந்துள்ளதென்று இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் எஸ். தொண்டமான் தெரிவித்துள்ளார்.

அத்துடன்ஐ தே. கட்சியைச் சேர்ந்த 116 பாராளுமன்ற உறுப்பினர்களும், தொழிலாளர் காங்கிரஸைச் சேர்ந்த மூன்று பாராளுமன்ற உறுப்பினர்களும் ஜனாதிபதிக்குப் பூரண ஆதரவைத் தெரிவித்துள்ளதன் விளைவாக அரசாங்கத்திற்கு பத்தும் பெரும்பான்மை வாக்குகள் உள்ளன என்றும் தொண்டமான் தெரிவித்தார்.

இதர தமிழ்க் கட்சிகளையும், சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸையும் தவிர்த்து இந்தப் பத்து பெரும்பான்மை வாக்குகள் உள்ளன என்றும், இந்தச் சூழ்நிலைகளின் கீழ் ஜனாதிபதிக்கு எதிரான பிரேரணையை எந்த விதத்திலும் ஏற்றுக்கொள்ளமுடியாது என்றும் தொண்டமான் தெரிவித்தார்.

## ஆனையிறவில் ஒரு படைபலி

ஆனையிறவு இராணுவ முகாமிற்கு சற்று முன்பாக பதுங்கு குழி அமைக்க முயன்ற சிறிலங்கா இராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகள் மேற்கொண்ட தாக்குதலில் இராணுவத்தில் ஒருவர் கொல்லப்பட்டதாகவும் ஏனையோர் தப்பியோடிவிட்டதாகவும் தெரிய வருகிறது.

இச்சம்பவம் நேற்று முன்தினம் பிற்பகல் 3-30 மணியளவில் நிகழ்ந்துள்ளது.

## உண்மைகள் வெளிவரவே பாராளு.ஒத்திவைத்தேன்

### - பிரேமதாசா

(கொழும்பு)

நான் எதையும் மறைக்க வேண்டியதில்லை. எல்லா உண்மைகளும் வெளியே வரப் போதிய அவகாசம் அளிக்கவே பாராளுமன்றக் கூட்டத்தை ஒரு மாதம் ஒத்திவைத்தேன் என்று ஜனாதிபதி ஆர். பிரேமதாசா கூறியுள்ளார்.

நேற்று பி.பி.ஸியின் ஆசிய சேவையிலும், தமிழோசையிலும் ஒலிபரப்பாகியது.

மேலும் அவர் தனது பேட்டியில் கிழக்கு மாகாணத்தில் உள்ள இராணுவ நிலைமை மிகவும் சிக்கலானது இப்பகுதியில் பெரும்பான்மையாக தமிழ் மக்களும் மற்றும் சிங்கள. முஸ்லிம் மக்களும் வாழ்கிறார்கள். திருமலையிலும், அம்பாறையிலும் நிறைய சிங்களக் குடியேற்றங்கள் இருக்கின்றன. இவற்றைப் பாதுகாக்கும் நோக்கத்தோடு இப்பகுதிகளில் பெருந்தொகையில் இராணுவமும், பொலிஸும் குவிக்கப்பட்டிருக்கிறது. கிழக்கில் கடலோரமாகப் பெருமளவில் இராணுவ முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளன அப்படியிருந்தும் கிழக்கு மாகாணம் அரசின் கட்டுப்பாட்டில் இருப்பதாகக் கூறமுடியாது. கிழக்கில் எமது ஆயுத நடவடிக்கைகள் தொடர்ந்து நடக்கின்றன. எமது போராளிகள் எல்லா இடங்களிலும் நடமாடித் திரிகிறார்கள். கிராமப் புறங்களும், காட்டுப் பகுதிகளும் எமது கட்டுப்பாட்டில் இருக்கின்றன. எனவே கிழக்கில் இருந்து புலிகளை விரட்டிவிட்டோம் என்று அரசு கூறுவது முற்றிலும் தவறானது.

## மோசமான நிலையிலில்லை

★ கேள்வி: 1990 ஜூன் மாதம் இருந்த நிலையிலும் பார்க்க நீங்கள் இப்போது மோசமான நிலையில் இருக்கிறீர்கள் என்பது உண்மையல்லவா?

பதில்: யுத்தம் ஆரம்பமாவதற்கு முன்னர் கிழக்கு மாகாணம் புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்தது என்பது தவறு. யுத்தத்திற்கு முன்னர் நீண்ட காலமாகக் கிழக்கு மாகாணம் இந்தியத் துருப்புக்களின் கட்டுப்பாட்டில் இருந்தது இந்தியத் துருப்புக்கள் வெளியேறியதன்பின்னர் சிங்கள இராணுவமும், பொலிஸும் அப்பகுதியில் நிலைகொண்டிருந்தன. எனவே கிழக்கு மாகாணம் புலிகளின் முழுக் கட்டுப்பாட்டில் இருந்தது என்று சொல்ல முடியாது

## சிறுபிள்ளைத்தனமானது

★ கேள்வி: ஆனையிறவில் தமக்குப் பெரும் வெற்றி கிடைத்திருப்பதாக இராணுவம் கூறுகிறதே. போர் உத்தி என்ற முறையில் பிழையான உத்தி ஒன்றைக் கையாண்டுவிட்டதாகக் கருதுகிறீர்களா?

பதில்: ஆனையிறவுப் போர் ஒரு பெரிய வெற்றியென சிங்கள அரசு கூறுவது வெறும் பொய்ப் பிரசாரம். எமது வெற்றிகரமான தாக்குதல்களால் ஆனையிறவுத் தளம் வீழ்ச்சியடையும் நிலை இருந்தது. 800 இராணுவத்தினர் எமது முற்றுகைக்குள் சிக்கிக் கொண்டனர். இவர்களை மீட்பதற்காக 8000 பேர் கொண்டு பெரிய தாக்குதலை நடத்த சிங்கள அரசு நிர்ப்பந்திக்கப்பட்டது. இந்தத் தாக்குதலில் சிங்கள அரசுக்கு என்றுமில்லாத பெரிய இழப்புகள் ஏற்பட்டது ஐந்து மைல் தூரம் படைகளை நகர்த்த 24 நாட்கள் தேவைப்பட்டன. இதனை வெற்றியென எக்காளமிடுவது சிறுபிள்ளைத்தனமானது. ஒரு பெரிய மரபுவழிப் போரை நேருக்குநேர் எதிர்கொள்ளும் பெரும் வளர்ச்சியை புலிகள் இயக்கம் அடைந்துள்ளது ஆனையிறவுப் போர் இதற்கு நல்லதொரு எடுத்துக்காட்டு.

## ராணுவ தீர்வுகாணமுடியாது

★ கேள்வி: புலிப்படையை மரபுவழிஇராணுவமாக மாற்ற நீங்கள் எடுத்துவரும் முயற்சி பற்றிக் கூறுவீர்களா? இது புலிப்படையின் முன்னேற்றத்திற்கு எந்தளவிற்கு முக்கியமானது?

பதில்: சிங்கள அரசிற்கு எதிரான எமது ஆயுதப் போராட்டம் பதினைந்து ஆண்டுகளுக்கு மேலான நீண்ட வரலாற்றைக் கொண்டது. இந்த நீண்ட வரலாற்றுப் போக்கில் நாம் படிப்படியாக பெரும் வளர்ச்சியைக் அடைந்திருக்கிறோம் வந்த நாம் இப்போது மரபுவழி இராணுவமாக மாறிவருகின்றோம். இராணுவரீதியில் இது ஒரு பெரிய வளர்ச்சியைக் குறிக்கிறது. இந்த வளர்ச்சி எமது விடுதலைப் போராட்டத்தின் வளர்ச்சி தான். இந்த வளர்ச்சி எமது போராட்டத்தின் பெரும் திருப்புமுனையாகவும் அமைகிறது இந்த வளர்ச்சி மூலம் சிங்கள அரசு ஒரு பாடத்தை கற்றுக்கொள்ள வேண்டும் அதாவது இராணுவ நடவடிக்கை மூலம் தமிழ் மக்களின் தேசிய பிரச்சினைக்கு தீர்வுகாண முடியாது என்பது தான் அது.

## பலவந்தமாகசேர்ப்பதில்லை

★ கேள்வி: படையின் அளவு விரிவுபட்டுக்கொண்டு போகும் அதேவேளை சிறுவர்களையும் சிறுமியர்களையும் சேர்த்துக்கொள்வதாக கண்டனங்களும் குற்றச்சாட்டுக்களும் எழுந்துள்ளன. இந்த அளவு இளம் வயதில் ஏன் ஆட்களைச் சேர்த்துக்கொள்கிறீர்கள்? இப்படிச் சேர்த்துக்கொள்ளப்படுபவர்கள் எத்தனை வயதில் உங்கள் படையில் செயல்படத் தொடங்குகிறார்கள்? அதாவது சண்டைக்கு அனுப்பப்படுகிறார்கள்?

பதில்:- நாம் பலவந்தமாக எவரையும் இராணுவத்தில் சேர்த்துக் கொள்வதில்லை, அரச பயங்கரவாத ஒடுக்குமுறையினாலும், அதனால் எமது சமுதாயத்தில் ஏற்படும் தாக்கங்களினாலும் சிறுவர்கள் எமது இயக்கத்தில் சேர்ந்துகொள்கிறார்கள் என்பதுதான் உண்மை அதுமட்டுமல்லாது பல பெற்றோர்கள் பகிரங்கமாக எமது கூட்ட மேடைகளிலேயே தமது புதல்வர்களையும், புதல்விகளையும் எம்மிடம் ஒப்படைக்கிறார்கள் அப்படி ஒப்படைக்கப்படும் சிறுவர்களுக்கு நாம் கல்வி வசதி செய்து கொடுக்கிறோம் பல்வேறு துறைகளில் பயிற்றுவிக்கிறோம். தொழிலறிவை வளர்த்து விடுகிறோம் சிறு வயதானவர்களை நாம் போர்க்களத்திற்கு அனுப்புவதில்லை.

## எமது மக்கள் நலனை முதன்மைப்படுத்தினோம்

★ கேள்வி: இந்தியாவுக்கும் உங்களுக்குமான உறவு மோசமாக இருக்கிறதே, இது உங்களுக்கு கவலையைத் தரவில்லையா

பதில்: நீண்ட காலமாகவே இந்தியாவுக்கும், எமக்கும் மத்தியிலான உறவில் பிரச்சினை ஏற்பட்டு வந்துள்ளது. 1983-ல் இந்திய அரசு எமது பிரச்சினையில் தலையிட்டது. ஆயுதப் பயிற்சி கொடுத்து பல குழுக்களை உருவாக்கியது. பின்னர் 1987-ல் சிறிலங்கா அரசுடன் ஒரு ஒப்பந்தம் செய்து அதை எமது மக்கள் மீது திணிக்க முயன்றது அதற்கு நாம் எதிர்ப்பு தெரிவித்ததும் எம்மீது ஒரு யுத்தத்தை ஏவிவிட்டது. இப்படியாக இந்திய அரசு தனது சொந்த நலனைப் பேண முயன்றது நாம் எமது மக்களின் நலனை முதன்மைப்படுத்தியபோது எமக்கும் இந்திய அரசுக்கும் இடையே முரண்பாடும். பகைமையும் ஏற்பட்டது. இந்த நீண்ட கசப்பான வரலாற்றுத் தொடர்ச்சியாகவே எமது இயக்கத்திற்கு எதிராக இந்திய அரசு செயற்படுகின்றது இந்தியாவின் இந்த அணுகுமுறை எமக்கு கவலையும், ஏமாற்றத்தையும் கொடுக்கத்தான் செய்கிறது.

## புலிகளைவைத்து சதுரங்கம்

★ கேள்வி: தமிழ் நாட்டில் புலிகளின் நடவடிக்கைகள் நசுக்கப்பட்டு வருவது பற்றி தங்களால் குறிப்பாக கூற முடியுமா! இலங்கையில் நடத்தும் போராட்டத்தை தமிழ் நாட்டில் எடுக்கப்படும் நடவடிக்கைகள் எந்த வகையில் மோசமாக பாதிக்கிறது?

பதில்: நீண்ட காலமாகவே தமிழ் நாட்டிலும் புலிகளை

(4ஆம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்


### தேவை

நாற்று இடமாங்கொட்டை மற்றும் லக்ஸ்பிறே, கைலண்ட் போன்ற பால்மா வெற்றுப் பக்கற்றுகள் தேவை. மில்க் வறை, யாழ்ப்பாணம்.

(B-3064)

### காணவில்லை

பமேந்திரன் எனப்படும் சுமார் 13 வயது மதிக்கத்தக்க மெலிந்த தோற்றமுடைய பையனை 30-8-91 இரவு முதல் காணவில்லை. வெற்றிலை போடும் பழக்கம் உடையவர். கடைசியாக காணப்பட்ட போது நீல நிற அரைகாற் சட்டையுடன் காணப்பட்டார். அவரைப் பற்றிய தகவல்களை மு சுந்தரலிங்கம் 'சதாபொன்ஸ்' மாவுசந்தி அல்வாய் என்ற முகவரிக்கு தெரியப்படுத்தவும்.

(B/3063)


## பால்மா அன்பளிப்பு

(யாழ்ப்பாணம்)

வேலணை பகுதிகளிலிருந்து இராணுவ நடவடிக்கைகளால் இடம் பெயர்ந்து அரியாலை அகதிமுகாமில் தங்கியுள்ள குடும்பங்களுக்கு சுண்டிக்குளி மகளிர் கல்லூரி வியோகினப் மாணவிகள் பால்மா பக்கற்றுக்களை அன்பளிப்பாக வழங்கியுள்ளனர். இம்முகாமில் 250 குடும்பங்கள் தங்கியுள்ளன. (ச)

## மீண்டும் 'பிராவ்தா'

(மாஸ்கோ)

புதிய சிரேஷ்ட ஆசிரியருடனும் புதிய விலையேற்றத்துடனும் 'பிராவ்தா' வார இறுதியில் மீண்டும் பிரசுரமானது.

சவால்விட முடியாதிருந்த கம்யூனிஸ்ட் கட்சியின் பிரசுரமாக 'பிராவ்தா' பல வருடங்களாகப் பிரசுரமானது தெரிந்ததே.

பிராவ்தா உட்பட ஐந்து கம்யூனிஸ்ட் கட்சி சார்பான பத்திரிகைகள் பிரசுரமாவதற்கு கடந்த மாதம் 23ஆம் திகதி பொறிஸ் யெல்சின்


## 41-ம் நாள் நினைவு தினம்

### வீரவேங்கை வாணன்

(நடேசு ஜெயக்குமார்) (குமார்)

வீரஜனனம் 18 05-1972 — வீரமரணம் 27-07-1991

சின்ன வயதினில் சீற்றம் கொண்டு புலியானாய்
உன் சிரித்த முகம் காணாது தவித்து நின்றோம்
நாட்டிலே மக்கள் படும் துன்பத்தை
நீக்கிட நாமும் இணைந்திட வேண்டுமென்று
தக்க தருணத்தில் வீரப்புலியானாய்
அடங்கா எதிரியுடன் கட்டைக்காட்டிலே
நேர் நின்று போரிட்டாய்
மடிந்து விட்டாய் வீரனாய் களத்திலே
நீ ஓடோடி வாராயோ உன் பாச முகத்தைக்
காட்டாயோ வாணனே
ஈழமது விரைந்து கண்டிடவே
ஈழமண்ணில் தவழ்ந்திடுவீர்!

கட்டைக்காட்டில் உன்னுடன் வீரமரணம் அடைந்த அனைத்து மாவீரர்களையும் நினைவுகூர்ந்து அஞ்சலிப்போம்.

உரும்பராய் வடக்கு,
சமாதியடி.

உங்கள் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்தித்து நிற்கும்
அப்பா, அம்மா, சகோதரி
சகோதரர்கள், நண்பர்கள்.

(B/3058)

## 55ஆம் நாள் நினைவஞ்சலி



## 41ஆம் நாள் நினைவஞ்சலி



### லெப். கேணல் சரா

(சின்னத்துரை ஜீவராசா)

வீரஜனனம் 19 - 4 - 1962 — வீரமரணம் 27 - 7 - 1991

தாய் தந்தை சுற்றத்தை மறந்து - நீ
தமிழ் மாதா துயர் துடைக்கப் புகுந்தாய்!
அந்நியர் படை விரட்ட - நீ
அரும்பாடு பட்டதனால்
விழுப்புண்கள் பல பெற்றபோதும்
வீரத்தைக் கைவிடவேயில்லை!
ஆறாமல் நோவிருந்த போதும் - அயராது
ஆனையிறவு சென்றாய்
சென்றவன் நீ மீண்டு வரவில்லை - உன்
உடல்தன்னும் நாம் காணவில்லை
உயிர்மட்டும் தமிழுக்கு இல்லை
தன் உடலையும் தமிழ் மண்ணுக்கு ஈந்தாய்

## 90-ம்நாள் வீர அஞ்சலியும்

### அந்தியேட்டி அழைப்பும்

### வீரவேங்கை பவான்

(துரைரத்தினம் திபாகன்)

அன்னாரின் நினைவஞ்சலியும் அந்தியேட்டிக் கிரியைகளும் 06-09-91 வெள்ளிக்கிழமை அவரது ''கணேஸ்வரம்'' இல்லத்தில் நடைபெறவுள்ளது இதில் இயக்க நண்பர்கள், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்து கொள்ளும்படி வேண்டப்படுகின்றீர்கள்.

தகவல்:

கணேஸ்வரம்,
அளவெட்டி.

திரு. திருமதி துரைரட்ணம்
குடும்பத்தினர்.

(R/1701)


## நினைவு கூருகின்றோம்...

### 1991 - 09 - 05

1984 ஆம் ஆண்டு இதேதினத்தில் மல்லாவியில் சிறிலங்காப் படையினரால் படுகொலை செய்யப்பட்ட 6 தமிழர்கள்

1985 ஆம் ஆண்டு மதவாச்சிக்கும், வவுனியாவிற்கும் இடைப்பட்ட பகுதியில் சிறிலங்காப் படையினரால் படுகொலை செய்யப்பட்டு எரிக்கப்பட்ட 35 தமிழர்கள்

1987 ஆம் ஆண்டு பன்றிக்கெய்த குளத்தில் தேசவிரோதிகளுடனான மோதலில் வீரமரணமெய்திய

இரத்தினம் (சிவகுமார் - வவுனியா)

1988 ஆம் ஆண்டு வீரமரணமெய்திய

ஜெகன் (மாணிக்கவாசகர் ஜெகதீசன் - ஆனைக்கோட்டை)

மட்டக்களப்பில் இந்தியப் படையினரால் முகாமில் வைத்துப் படுகொலை செய்யப்பட்ட தமிழ் இளைஞன், தமிழ்ப் பெண்

1989 ஆம் ஆண்டு பன்குளம், 4ஆம் கண்டப் பகுதியில் இந்தியப் படையினர் பதுங்கி இருந்து மேற்கொண்ட தாக்குதலில் வீரமரணமெய்திய

லெப். பாஸ்கர் (வேலன் பாக்கியம் விஜயகுமார் - காரைதீவு)

வன்னிவிளாங்குளத்தில் எதிர்பாராத விதமாக ஏற்பட்ட துப்பாக்கிச் சூட்டில் எமைப்பிரிந்த

புதிய சிரேஷ்ட ஆசிரியருடனும் புதிய விலையேற்றத்துடனும் 'பிராவ்தா' வார இறுதியில் மீண்டும் பிரசுரமானது.

சவால்விட முடியாதிருந்த கம்யூனிஸ்ட் கட்சியின் பிரசுரமாக 'பிராவ்தா' பல வருடங்களாகப் பிரசுரமானது தெரிந்ததே.

பிராவ்தா உட்பட ஐந்து கம்யூனிஸ்ட் கட்சி சார்பான பத்திரிகைகள் பிரசுரமாவதற்கு கடந்த மாதம் 23ஆம் திகதி பொறிஸ் யெல்சின் தடைவிதித்திருந்தார். புரட்சிச் சதியை ஆதரித்ததே இதற்குக் காரணமாகும்.

## உதைபந்தாட்டப் போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ். உதைபந்தாட்ட மத்தியஸ்தர் சங்கம், யாழ் உதைபந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன், தமிழ்த் தலைமுறையில் நடாத்திய உதைபந்தாட்டப் போட்டியின் இறுதி ஆட்டம், எதிர்வரும் 7 ஆம் திகதி பாஷையூர் சென் அந்தனீஸ் விளையாட்டு மைதானத்தில் பிப 3.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி யாழ் மாவட்ட அரசியல் நிர்வாகப் பொறுப்பாளரான திரு ராஜன் இவ் வைபவத்தில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு தமிழீழக் கொடியை ஏற்றி வைப்பார்.

இந்த இறுதிப் போட்டியில் நாவாந்துறை சென்மேரிஸ் அணி மோதவுள்ளது.

## தபால்களைப் பெறலாம்

(வடமராட்சி கிழக்கு)

சுண்டிக்குளம், முள்ளியான், தாளையடி ஆகிய மூன்று உப தபால் நிலையங்களால் விநியோகிக்கப்பட வேண்டிய தபால்கள் செம்பியன்பற்று உப தபால் நிலையத்தில் உள்ளன.

தபால்களுக்கு உரியவர்கள் உப தபால் நிலைய கடமை நேரத்தில் செம்பியன்பற்று உபதபால் நிலையத்தில் கடிதங்களைப் பெற்றுக் கொள்ளலாம் (36)



## வீரவேங்கை நிரோ
### (உதயகுமாரி வல்லிபுரம்)

| தாயின் மடியில் | தாயகவிடியில் |
|---|---|
| 21 - 12 - 1966 | 11 - 07 - 1991 |

தமிழீழத்தின் விடிவுக்காக
தமிழன்னையின் சுதந்திரத்திற்காக,
தயங்காமல் துப்பாக்கியேந்திய வீர வேங்கையே!

ஆனையிறவு தனில் மாற்றானை
அடியோடு விரட்டியடிப்பதற்காய்
நிரோ என்னும் வீராங்கனையாய்
நின்று சமர் புரிந்து விண்ணுலகம்
சென்றவளே! எங்கள் உதயாவே!

உலைக் களத்து இரும்பாய் உள்ளம் கொதிக்குதம்மா
உயிருள்ளவரை உன் பெயர் நிலைத்திருக்கும்
தன்னலமற்ற உனது வீர உணர்வுகள்
தமிழீழத்தின் எல்லையெங்கும் விளைந்து நிற்கும்.

**உம் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.**

**ஆனையிறவுப் போரில் வீரமரணம் அடைந்த அனைத்து மாவீரர்களையும் நினைவு கூர்ந்து அஞ்சலிக்கின்றோம்.**

புளியந்தோட்டம்,
மல்லாகம்.

உம் பிரிவால் வாடும்
பெற்றோர், சகோதர சகோதரிகள்,
மைத்துனர்மார், உற்றார், உறவினர்,
நண்பர்கள்.

(R/1702)

தாய் தந்தை சுற்றத்தை மறந்து - நீ
தமிழ் மாதா துயர் துடைக்கப் புகுந்தாய்!
அந்நியர் படை விரட்ட - நீ
அரும்பாடு பட்டதனால்
விழுப்புண்கள் பல பெற்றபோதும்
வீரத்தைக் கைவிடவேயில்லை!
ஆறாமல் நோவிருந்த போதும் - அயராது
ஆனையிறவு சென்றாய்
சென்றவன் நீ மீண்டு வரவில்லை - உன்
உடல்தன்னும் நாம் காணவில்லை
உயிர்மட்டும் தமிழுக்கு இல்லை
தன் உடலையும் தமிழ் மண்ணுக்கு ஈந்தாய்
மறவீரன் புகழ் என்றும் ஓங்க
அவன் விட்ட பணியதுவும் தொடரட்டும்!

வன்னியசிங்கம் வீதி,
கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில்.

சித்தப்பா குடும்பத்தினர்
(எஸ்.இரத்தினசிங்கம்)

(B-3059)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

| வீரஜனனம் | வீரமரணம் |
|---|---|
| 10 - 11 - 1973 | 05 - 08 - 1991 |



ஆனையிறவு மோதலில் வீரமரணமடைந்த

### வீரவேங்கை நித்தி
### (கிருஷ்ணபிள்ளை தவரத்தினம்)

(கரம்பைக்குறிச்சி மேற்கு, வரணி)

பூவினொரு பிள்ளையென
இருந்தவன் தவரத்தினம் —
புலியாய் மாறினன் ..
நித்தியாய் நிமிர்ந்தனன் ...
ஆனையிறவுக் களந்தனில்
பேரிடி புகுந்ததென
பகைவர்கள் அதிர்ந்தனர் —

—குடும்பத்தினர்.

(B/3060)

1988 ஆம் ஆண்டு வீரமரணமெய்திய

**ஜெகன்** (மாணிக்கவாசகர் ஜெகதீசன் - ஆனைக்கோட்டை)

மட்டக்களப்பில் இந்தியப் படையினரால் முகாமில் வைத்துப் படுகொலை செய்யப்பட்ட தமிழ் இளைஞன், தமிழ்ப் பெண்

1989 ஆம் ஆண்டு பன்குளம், 4ஆம் கண்டப் பகுதியில் இந்தியப் படையினர் பதுங்கி இருந்து மேற்கொண்ட தாக்குதலில் வீரமரணமெய்திய

**லெப். பாஸ்கர்** (வேலன் பாக்கியம் விஜயகுமார் - காரைதீவு)

வன்னிவிளாங்குளத்தில் எதிர்பாராத விதமாக ஏற்பட்ட துப்பாக்கிச் சூட்டில் எமைப்பிரிந்த

**சண்** (சின்னத்தம்பி புண்ணியமூர்த்தி - வன்னிவிளாங்குளம், மாங்குளம்)

1990 ஆம் ஆண்டு யாழ். கோட்டைப் பகுதியில் வீரமரணமெய்திய

**கேம்நாத்** (ஏகநாதன் விமல்ராஜ் - காரைநகர்)

யாழ். கோட்டைப் பகுதியில் சிறிலங்காப் படையினருடனான நேரடி மோதலில் வீரமரணமெய்திய

**நிசாந்** (செல்லையா சத்தியசீலன் - மாதகல்)

வன்னிக்குளத்தில் சுகயீனம் காரணமாக எமைப் பிரிந்த

**சத்தியசீலன்** (துரைரத்தினம் சுரேஷ்குமார், ஒட்டறுத்தகுளம், வவுனிக்குளம்)

மயிலிட்டியில் சிறிலங்காப் படையினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் வீரமரணமெய்திய

**கமல்** (இராசரட்ணம் ஜீவராசன் - கீரிமலை வீதி, சித்தங்கேணி)

வந்தாறுமூலையில் சிறிலங்காப் படையினர் மேற்கொண்ட சுற்றி வளைப்பின் போது ஏற்பட்ட மோதலில் காயமுற்ற நிலையில் சயனைற் உட்கொண்டு வீரமரணமெய்திய

**லெப். காமன்** (கதிர்காமத்தம்பி ஜெகதீசன் - ஏ. ஜி ஏ. வீதி, செங்கலடி)

இதே சம்பவத்தில் தனது கைக்குண்டை தானே வெடிக்க வைத்து வீரமரணமெய்திய

**2ஆம் லெப். முத்து** (அழகப்போடி குமார் - மயிலம்பாவெளி)

கிளிநொச்சியில் எதிர்பாராத விதமாக மிதிவெடியில் சிக்கியதில் எமைப்பிரிந்த

**பழனி** (கிண்ணியடி)

கல்லாறுப் பகுதியில் சிறிலங்காப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட 10 தமிழர்கள்

**ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்.**

**- விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி**

(B/3061)

### சிந்தனைக்கு

தீங்கைத் தடுக்கக்கூடிய நிலையில் இருந்தும் அதை அனுமதிப்பவன் தீங்குக்கு உடந்தையானவனே.
— எட்வர்ட் அகஸ்ட் ஸ்லீப்ரீமன்


# ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம், 05-09-1991
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 5288
த. பெ. எண் 05


## பேச அஞ்சும் சிறிலங்கா எம். பிகள்

சிறிலங்காவின் ஜனநாயகம் எங்கே செல்கின்றது?

கடந்தவாரம் சிறிலங்கா ஜனாதிபதி ஆர். பிரேமதாசாவிற்கு எதிராகக் கொண்டு வந்த 'இம் பீச் மன்ட்' மனுவில் சிறிலங்கா பாராளுமன்ற உறுப்பினர்களில் பெரும்பான்மையானோர் கையொப்பம் இட்டிருந்தமையால் அதனைச் சபாநாயகர் ஏற்றுக் கொள்ள வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. மொத்தமுள்ள 225 உறுப்பினர்களில் சுமார் 122 பாராளுமன்ற உறுப்பினர்கள் இதில் கையொப்பம் இட்டதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதன் பிரகாரம் சிறிலங்கா ஜனாதிபதிக்கு எதிரான மனுவில் குறைந்தது 45 ஐ. தேசிய கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் கைச்சாத்திட்டிருக்க வேண்டும் என்பதையே இது காட்டுகின்றது.

அதேவேளை நேற்று முன்தினம் சிறிலங்கா ஜனாதிபதி ஆர். பிரேமதாசா மீது நம்பிக்கைத் தீர்மானம் கொண்டு வருவதற்கான தீர்மானத்தில் 116 ஐ. தே. கட்சி உறுப்பினர்கள் கையொப்பமிட்டுள்ளார்கள் என தெரிவிக்கப்படுகின்றது. அத்தோடு பாராளுமன்றத்தில் 20 பெரும்பான்மை ஆசனங்கள் தமக்கு உள்ளன எனவும் ஐ. தே. கட்சியின் அரசாங்கம் அறிவித்துள்ளது.

அவ்வாறாயின் அங்கு நடப்பது என்ன?

ஐக்கிய தேசியக் கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களின் நிலைப்பாடுதான் என்ன? அரச தரப்பினர் கூறுவது போன்று பிழையான விளக்கத்தில் கையொப்பம் இட்டனரா? அவ்வாறாயின் அவர்கள் எம்.பி. பதவிக்குத் தகுதியானவர்களா?

பிரேமதாசா அதிருப்தியாளர்களில் சுமார் பத்திற்கும் குறைவானவர்களே இதுவரை தம்மை இனங்காட்டியுள்ளார்கள். ஏனையவர்கள் இதுவரை தம்மை இனங்காட்டிக் கொள்ளவில்லை. இதனை பிரேமதாசா அதிருப்தியாளர்களும் விரும்பவில்லை. பாதுகாப்பதில் அவர்கள் தீவிர அக்கறையும் காட்டி வருகின்றனர். இதற்காக சிறிலங்கா ஜனாதிபதி கூட்டிய ஐ. தே. க. பாராளுமன்ற குழுக்கூட்டத்தில் அதிருப்தியாளர்களையும் கலந்து கொள்ளுமாறு அதிருப்தியாளர் குழுவின் முக்கியஸ்தர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். அத்தோடு சிறிலங்கா ஜனாதிபதிக்கு எதிரான மனுவின் மீது இரகசிய வாக்கெடுப்புக் கோரும்படியும் கூறியுள்ளனர்.

சிறிலங்கா ஒரு 'ஜனநாயக நாடு' ஆனால், தமது

# புதிய சர்வதேச அரசியல் ஒழுங்கு

இன்று உலகிலுள்ள வலுமிக்க நாடு அமெரிக்கா. வலுவுள்ள நாடு என்ற வகையில் அது தனக்கு சாதகமான புதிய சர்வதேச ஒழுங்கை உருவாக்க முயற்சிக்கிறது. உலகமானது தான் விரும்புகின்றபடி மாறிக்கொண்டு போவதற்குப் பதிலாக முழு உலகத்தையும் அமெரிக்கா தனது விருப்பத்திற்கு ஏற்ற வகையில் மாற்றி அமைக்க முயற்சிக்கிறது என கீ-சின் எனும் அறிஞர் கூறுகிறார். அமெரிக்கா விரும்பும் புதிய சர்வதேச ஒழுங்கு உலகின் நலனை அடிப்படையாகக் கொண்டதல்ல. அமெரிக்காவின் நலனை அடிப்படையாகக் கொண்டது. உலகின் வளங்களை (இங்கு வளம் என்று கருதுவது மூலவளத்தை மட்டுமல்ல, தனது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவருவதே அமெரிக்கா கருதும் புதிய ஒழுங்கின் தாற்பரியமாகும்.

அமெரிக்காவின் பலம் பற்றிய நிலைமையைச் சற்று ஆராய்வோம். உண்மையில் அமெரிக்கா உலகப் பெரும் சக்தியாக திகழுமா? அல்லது வீழ்ச்சி அடையுமா? என்ற வாதப் பிரதிவாதங்கள் உள.

அமெரிக்கா வீழ்ச்சிப்பாதையில் செல்கிறது. அதன் பேரரசுத் தன்மை வெகுவிரைவில் வீழ்ந்துவிடும் என்ற ஒரு கருத்து உண்டு. ரோமப் பேரரசு ஆயிரம் ஆண்டுவரை நிலைத்தது. பிரித்தானியப் பேரரசு இருநூறு ஆண்டுவரை நிலைத்தது. அமெரிக்கப் பேரரசு ஐம்பது ஆண்டுகளில் சரிகின்றதா? பழைய பேரரசுகள் வீழ்ச்சி அடைந்தது போல அமெரிக்கப் பேரரசு வீழ்ச்சியடைந்து விடும் என்ற ஓர் அச்சம் பல ஆராய்ச்சியாளர்கள் மத்தியில் உண்டு. அமெரிக்கப் பேரரசு வீழ்ச்சி பற்றிய கருத்தை முன்வைத்தவர்களுள் மிகவும் முக்கியமானவர் போல் கென்டி என்பவராவர். வல்லரசுகளின் எழுச்சியும் வீழ்ச்சியும் என்று தொடங்கும் தலைப்பில் இவர் எழுதிய நூல் மிகவும் பிரபல்யம் வாய்ந்தது. இவ்வாறு முன்வைக்கப்பட்ட கருத்துக்களை எதிர்த்து எழுதியவர்களுள் முக்கியமானவர் ஜோசவ் எஸ். நை என்பவராவர். இவர் எழுதியவற்றுள் கைக்கெட்டிய முக்கியமானவை 'இருமுனை விசைக்குப்

## (பகுதி 3)

பின் அமெரிக்க மூலோபாயம்' என்னும் கட்டுரையும் 'உலக ஆதிக்க மாற்றம்' என்னும் கட்டுரையுமாகும்.

வரலாற்று விளக்கங்களையும் புள்ளி விபரங்களையும் காட்டி அளிக்கும் விளக்கங்களையும் மறுத்து அவற்றுக்கு நை புது விளக்கமளிக்கிறார்.

1950களில் உலகின் மொத்தப் பண்ட உற்பத்தியில் 1/3 பங்குக்கு குறையாது உற்பத்தி செய்த அமெரிக்கா 1980களில் 1/5 பங்குக்கும் சற்று அதிகமான அளவிலேயே உள்ளது. இது உற்பத்தியில் அமெரிக்கா வீழ்ச்சியடைந்து கொண்டு போகின்றது என்ற வாதத்தைக் கொண்டது.

இதற்கு எதிராக நை வைக்கும் வாதமானது இரண்டாம் உலக மகாயுத்தத்தில் ஏனைய நாடுகள் யுத்தத்தால் சீரழிந்த போது அமெரிக்கா யுத்தத்தால் பாதிக்கப்படாது மறுவளமாக வளர்ச்சியடைந்தது. இராணுவமும் வளர்ந்தது. கைத்தொழிலும் வளர்ந்தது. உலகம் உற்பத்தி இன்றி பாதிப்புற்றிருந்த சூழலில் அமெரிக்கா அதிக உற்பத்தியில் ஈடுபட்டது. இதன்மூலம் இவர் நிரூபிக்க முற்படும் விடயம் என்னவெனில் 1950 களில் அசாதாரணமான சூழலில் அமெரிக்கா பெரும் உற்பத்தியைச் செய்தது என்பதுதான். மேலும் யுத்தத்தால் பாதிப்புற்ற நாடுகள் அதிலிருந்து புனர் நிர்மாணம் பெற்று நிமிரும் போது அவைகள் உற்பத்தியில் ஈடுபட இயல்பாகவே உற்பத்தியின் அளவை அமெரிக்கா குறைக்க வேண்டி ஏற்பட்டது. அதுதான் 1950களில் 1/3 பங்கும், பின்பு 1980களில் 1/5 பங்கும், பற்றிய வேறுபாடாகும் என்றார். மேலும் இதனை அவர் விளக்குவதற்கு இன்னொரு புள்ளி விபரத்தையும் காட்டுகின்றார். அதாவது இரண்டாம் உலகமகா யுத்தம் தொடங்க முன்பு இருந்த புள்ளிவிபரங்கள். அதன்படி 1930களில் அமெரிக்காவின் உலகளாவிய உற்பத்தி வீதம் 22 வீதம்—24 வீதம் இடைப்பட்டதாகும். இதன் விகிதமே 1960 களிலும். எனவே இது வீழ்ச்சியல்ல, இதுதான் இயல்பான போக்கு என்றும் 1950 களில் ஏற்பட்ட ஓர் அசாதாரண நிலைமையை வைத்துக் கொண்டு எக்காலத்துக்கும் பொருந்துமாக விளக்கமளிக்க முடியாதென்றும் வாதிடுகின்றார். 1975 ஆம் ஆண்டு 23 வீதம் இருந்ததான ஒரு புள்ளி விபரத்தையும், 1988 இல் 26 வீதம் இருந்ததான இன்னொரு புள்ளி விபரத்தையும் காட்டுகிறார்.

நையினுடைய அபிலாசைகளை நான் ஏற்றுக் கொள்ளவில்லை. ஆனால் அவர் கூறியுள்ள விளக்கத்தினை நாம் உதாசீனம் செய்ய முடியாது என்றே கருதுகிறேன். ஜப்பான், ஜேர்மனி என்பன அமெரிக்காவுடன் சமதையுள்ள சக்திகளாக அமைந்துவிடும் என்ற வாதத்தையும் அவர் மறுக்கிறார். ஜப்பான் பொருளாதாரம் எனும் ஒற்றைப் பரிமாணத்தில் மட்டும் அது ஒரு பொருளாதார வல்லரசு என்றும், ஆதலினால் அது ஏனைய வகைகளில் அமெரிக்காவுடன் நின்றுபிடிக்க முடியாதெனவும் அவர் கருதுகிறார். ஐக்கிய ஜேர்மனி அமெரிக்காவின் மொத்தப் பொருளாதாரத்தில் 1/5 பங்கு மட்டுமே பலமுள்ளதென்றும் ஆதலினால் அமெரிக்காவுடன் நின்று பிடிக்க முடியாதென்றும் கருதுகிறார். மேலும் ஐக்கிய ஐரோப்பிய அரசொன்று தோன்றினாலே தவிர அதுவரை அமெரிக்கா தான் உலகப் பலம் மிக்க அரசு என்ற முடிவுக்கு அவர் வந்துள்ளார்.

ஜப்பானின் பொருளாதார வளர்ச்சி பற்றி பெரும் அச்சத்தை மேற்குத்தேச புத்திஜீவிகள் வெளிப்படுத்துகிறார்கள். அதனை எதிர்கொள்வதற்குரிய வழிவகைகளையும், ஆலோசனைகளையும் அளிப்பதில் அமெரிக்கப் புத்திஜீவிகள் பெரிதும் ஆர்வம் காட்டுகின்றனர். ஆனால் ஜப்பானின் பொருளாதார போக்குப் பற்றிய ஒரு ஜப்பானிய ஆராய்ச்சியாளரின் கருத்தினை இங்கு நோக்குதல் பெரிதும் பயனுள்ளது. அது பற்றி யங்-குவான் யூன் எழுதிய கட்டுரையின் சாராம்சத்தை நோக்குவோம்.

(தொடரும்)

மாவீரர் கப்டன் ஹீரோராஜின் நினைவாக மு. திருநாவுக்கரசு அவர்கள் வெளியிட்ட "புதிய சர்வதேச அரசியல் ஒழுங்கு" எனும் நூலின் பகுதி மூன்றின் இன்னொரு பகுதி இந்த இதழில் வெளியாகிறது.

## ஆதிதிராவிடர் மீது தாக்கு; தமிழகத்தில் பேரணி

(சென்னை) இந்தப் பேரணியை செடுல்

## மண்ணெய் எடுத்து வர அனுமதிக்கப்பட்டதாம்

கூறுவது போன்று ... யொப்பம் இட்டனரா? அவ்வாறாயின் அவர்கள் எம்.பி. பதவிக்குத் தகுதியானவர்களா?

பிரேமதாசா அதிருப்தியாளர்களில் சுமார் பத்திற்கும் குறைவானவர்களே இதுவரை தம்மை இனங்காட்டியுள்ளார்கள். ஏனையவர்கள் இதுவரை தம்மை இனங்காட்டிக் கொள்ளவில்லை. இதனை பிரேமதாசா அதிருப்தியாளர்களும் விரும்பவில்லை. பாதுகாப்பதில் அவர்கள் தீவிர அக்கறையும் காட்டி வருகின்றனர். இதற்காக சிறிலங்கா ஜனாதிபதி கூட்டிய ஐ. தே. க. பாராளுமன்ற குழுக்கூட்டத்தில் அதிருப்தியாளர்களையும் கலந்து கொள்ளுமாறு அதிருப்தியாளர் குழுவின் முக்கியஸ்தர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். அத்தோடு சிறிலங்கா ஜனாதிபதிக்கு எதிரான மனுவின் மீது இரகசிய வாக்கெடுப்புக் கோரும்படியும் கூறியுள்ளனர்.

சிறிலங்கா ஒரு 'ஜனநாயக நாடு' ஆனால், தமது கருத்தையும், அபிப்பிராயத்தையும் வெளியிடுவதற்கு ஏன் இந்தப் பாராளுமன்ற உறுப்பினர்கள், அஞ்சுகின்றார்கள்? ஒரு 'ஜனநாயக நாட்டின்' உயர் பீடமான பாராளுமன்றத்தின் உறுப்பினர்களே தமது கருத்துகளை வெளியிட ஏன் அஞ்சுகின்றனர்?

அவ்வாறாயின் ஐ.தே. கட்சியின் அதிருப்தியாளர்கள் குறிப்பிடுவது போன்று அவர்களுக்கு கொலை மிரட்டல்கள் உள்ளனவா? பாதுகாப்பு ஏற்பாடுகள் தளர்த்தப்பட்டுள்ளனவா?

அதிருப்தியாளர்களின் இவ்வாறான அச்சத்திற்கு உறுதிப்படுத்தக் கூடிய சான்றுகள் இல்லாவிடினும், அனுபவரீதியானதும் சந்தேகத்திற்குரியதுமான பல சான்றுகள் அவர்களிடம் உள்ளன. 1988 1989இல் தென்னிலங்கையில் ஜே வி பி. என்ற குற்றச்சாட்டில் நடந்த 40,000க்கும் மேற்பட்ட சிங்கள இளைஞர்கள் படுகொலைகள். சில தனிப்பட்ட விரோதம் காரணமாகவும், சில அரசியல் சவால்களில் நிகழ்ந்த கொலைகளும் பற்றிய சந்தேகங்கள் இந்த அச்சத்திற்கான காரணமாகவும் இருக்கலாம்.

நீண்டகாலம் ஜனநாயக ஆட்சிமுறை நடைபெறும் நாடு எனவும், தேர்தல்கள் ஒழுங்காக மேற்கொள்ளப்பட்டு மக்கள் பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்படும் நாடு எனவும் மார்புதட்டிக் கொள்ளும் சிறிலங்காவில், இன்று அரசபயங்கரவாதத்திற்கு பாராளுமன்ற எம்.பிக்களே அஞ்சி நடுங்குகின்றார்கள்.

ஆனால், 1977இல் இருந்து தமிழருக்கு எதிராக அரசபயங்கரவாதம் கட்டவிழ்த்து விடப்பட்டபோது இவர்கள் அனைவரும் அதற்கு ஆதரவாக இருந்தனர். தமிழருக்கு எதிரானது என்ற ரீதியில் அடக்குமுறைச் சட்டங்களுக்கு ஆதரவு வழங்கினர். இதற்கு நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதிப் பதவியும் உதவியது. அதேவேளை சட்டம் இலங்கை பூராகவும், சகல இனத்தவருக்கும் என்பதைஅவர்கள் அன்று உணரவில்லை.

பின்னர் 1988, 1989இல் சிங்கள இளைஞர்களை இந்தச் சட்டம் அழித்தபோது இதை உணர்ந்தாராயினும் தமது இலாபம் கருதி மௌனமாக இருந்தனர். இன்று தமது அடிப்படை உரிமைகளுக்கே சட்டம் எதிராக உள்ள போது பேசக்கூட அஞ்சுகின்றனர். ஆனால், இதற்கு சிறிலங்கா ஜனாதிபதியையோ, அன்றி அவரின் ஆதரவாளர்களையோ குறை கூறமுடியாது பேரினவாத நோக்கில் தமது ஜனநாயக உரிமைகளுக்குக் குழி தோண்டிய தம்மை தாமே நொந்து கொள்வதைத் தவிர வேறு வழியில்லை.

---

அமெரிக்கப் பேரரசு வீழ்ச்சியடைந்து விடும் என்ற ஓர் அச்சம் பல ஆராய்ச்சியாளர்கள் மத்தியில் உண்டு. அமெரிக்கப் பேரரசு வீழ்ச்சி பற்றிய கருத்தை முன்வைத்தவர்களுள் மிகவும் முக்கியமானவர் போல் கென்டி என்

இதற்கு எதிராக ... கும் வாதமானது இரண்டாம் உலகமகாயுத்தத்தில் ஏனைய நாடுகள் யுத்தத்தால் சீரழிந்த போது அமெரிக்கா யுத்தத்தால் பாதிக்கப்படாது மிகுவளமாக வளர்ச்சியடைந்தது இராணுவமும் வளர்ந்தது

... கொண்டு எக்காலத்துக்கும் பொருத்தமாக விளக்கமளிக்க முடியாதென்றும் வாதிடுகின்றார். 1975 ஆம் ஆண்டு 23 வீதம் இருந்ததான ஒரு புள்ளிவிபரத்தையும், 1988 இல் 26 வீதம் இருந்ததான இன்னொரு

...யாளரின் கருத்தினை இங்கு நோக்குதல் பெரிதும் பயனுள்ளது. அது பற்றி யங்-குவான் யூன் எழுதிய கட்டுரையின் சாராம்சத்தை நோக்குவோம்.

(தொடரும்)

---

# ஆதிதிராவிடர் மீது தாக்கு; தமிழகத்தில் பேரணி

(சென்னை)

தமிழகத்திலும் ஆந்திராவிலும் ஆதிதிராவிட மக்கள் தாக்கப்படுவதைக் கண்டித்து தமிழகத்தில் பேரணியொன்று நடத்தப்பட்டது.

கடந்த ஞாயிற்றுக் கிழமை தமிழக ஆளுநர் பீஷ்ம நாராயணசிங்கின் மாளிகையை நோக்கிச்சென்றஇந்தப்பேரணி அவரிடம் மகஜர் ஒன்றைக் கையளித்தது.

இந்தப் பேரணியை செடுல் வகுப்பினர் விடுதலை இயக்கமும், செடுல் வகுப்பினர், பழங்குடியினர் மேம்பாட்டுக்கழகமும் ஒழுங்கு செய்திருந்தது.

முன்னதாக ஆந்திராவில் சுந்தூர் கிராமத்திலும், தமிழகத்தில் பரமகுடியிலும் ஆதிதிராவிட மக்களைகாவல்துறையினர் துன்புறுத்தினர் என்று மேற்படி சங்கங்கள் அறிக்கை விடுத்திருந்தது தெரிந்ததே

# சோவியத் குடியரசுகள் மீது ரஷ்யா ஆதிக்கம் செய்யாது

(மொஸ்கோ) - பொறிஸ் யெல்சின்

சோவியத்ஒன்றியத்திலுள்ள குடியரசுகளின் மீது ரஷ்யா ஒருபோதும் ஆதிக்கம் செலுத்தாது என்று ரஷ்யக் குடியரசின் தலைவர் பொறிஸ் யெல்சின் கூறியுள்ளார் அவர் மேலும் கூறுகையில் சோவியத் அதிபர் கொர்பசேவிற்கு தாம் அரசியல் ஆதரவைத் தெரிவிப்பதாகவும், சுதந்திரம், ஜனநாயகம் ஆகியவற்றை கடைப்பிடிக்க தீர்மானித்துள்ள சோவியத் குடியரசுகள் ஒருபோதும் சாம்ராஜ்யமாக மாற மாட்டாது என்றும் குறிப்பிட்டார்.

# இந். - பாக். எல்லையில் யுத்த நிறுத்தம்

(டில்லி)

இந்திய- பாகிஸ்தான் எல்லையில் இருக்கும் இராணுவங்கள் நேற்று முன்தினம் யுத்த நிறுத்தத்தைக் கடைப்பிடித்தன. கடந்த ஒருவார காலமாக நடந்த துப்பாக்கிச் சண்டையில் குறைந்தது அறுபது இராணுவத்தினர் உயிரிழந்திருப்பதாக பாகிஸ்தானின் உத்தியோகபூர்வ செய்திகள் கூறியுள்ளன கடந்த இரு நாட்களாக தொலைபேசி மூலமாக நடாத்தப்பட்ட பேச்சுக்களின் விளைவாக தமது பகைமை நிலையைப் போக்க இருதரப்பு இராணுவத்தினரும் முன்வந்ததையடுத்து நேற்று முன்தினம் போர் நிறுத்தம் கொண்டு வரப்பட்டது.

# மண்ணெய் எடுத்து வர அனுமதிக்கப்பட்டதாம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்திற்கு தேவையான அளவு மண்ணெண்ணையைக் கொண்டுசெல்வதற்கு பாதுகாப்புச் செயலர் அனுமதி வழங்கியுள்ளதாக யாழ். அரசாங்க அதிபர் யாழ் செயலகத்திற்கு அவசரசெய்தி ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

யாழ். அரச அதிபர் எடுத்துக்கொண்ட தீவிர முயற்சியினாலேயே செயலாளர் தமது பூரண அனுமதியை வழங்கியுள்ளார். இவ்வார இறுதிக்குள் போதியளவு மண்ணெண்ணை யாழ்ப்பாணத்தை வந்தடையும் என செயலக வட்டாரங்கள் நம்பிக்கை தெரிவித்துள்ளன.

(ச)

# சாவக. கிராமிய வங்கியில் 10,000 ரூபா மீளளிக்கப்படும்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் கிராமிய வங்கி மூலம் ஓய்வூதியம் பெறும் வாடிக்கையாளரின் சேமிப்பில் ரூபா 300/- வைப்பிலுள்ளவர்களுக்கு அதன் சங்கக்கிளைகள் மூலம் 300/- ரூபாவுக்கு மேற்படாமல் கடனுக்கு உணவுப் பொருள்கள் வழங்கப்படவுள்ளன தேவையானோர் பொதுமுகாமையாளருக்கு எழுத்து மூலம் விண்ணப்பிக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

அத்துடன் கிராமிய வங்கியின் வாடிக்கையாளருக்கு சேமிப்புக்கணக்கு மூலம் ரூ.10,000/- வரை மீளளிக்கப்படும் எனவும் அரசாங்க உத்தியோகத்தர்களுடைய சம்பளக் காசோலைகளும் கணக்கில் வைப்பிலிட்டு மாற்றிக் கொடுக்கப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# பாதுகாப்பு உடன்படிக்கையில் லெபனான் சிரியா கைஎழுத்து

(பெய்ருத்)

லெபனானும் சிரியாவும் பாதுகாப்பு ஒப்பந்தமொன்றில் கைச்சாத்திட்டுள்ளன.

கடந்த 1ஆம் திகதி இருநாடுகளின் பாதுகாப்பு அமைச்சர்களும் கைச்சாத்திட்ட உடன்படிக்கை மூலம் லெபனான் மீது இஸ்ரேல் தாக்குதல் நடாத்தினால் சிரியா இஸ்ரேலைத் தாக்கும் என சிரிய பாதுகாப்பு அமைச்சர் தெரிவித்தார்.

## அறிவித்தல்

### ஆங்கில நிகழ்ச்சித்திட்டம் (TACEP) – 1991

ஆங்கில நிகழ்ச்சித் திட்டம் (TACEP) கல்வி அமைச்சின் அனுமதியுடன் கீழே தரப்பட்டுள்ள நிலையங்களில் 1991ஆம் ஆண்டு செப்டெம்பர் 15ஆம் திகதி ஆரம்பமாகும்.

இப் பயிற்சிநெறி மாதமொன்றிற்கு 25மணித்தியாலங்களாக ஆறு மாதங்களுக்கு சனி, ஞாயிறு தினங்களில் மட்டும் நடைபெறும். (நேரம் பி. ப 1மணி —5.30வரை) விண்ணப்பதாரி மணித்தியாலமொன்றிற்கு ரூபா 5/–வீதம் ஆறு மாதங்களுக்குரிய தொகையினை இரு தவணைகளில் செலுத்தவேண்டும்.

ஆசிரியர்கள், எழுதுவினைஞர்கள், பாடசாலைகளிலிருந்து விலகிய மாணவர்கள், ஏனைய அரச, தனியார் துறை ஊழியர்கள் இந்நிகழ்ச்சித் திட்டத்தில் பங்குபற்றித் தமது ஆங்கிலமொழி ஆற்றலினைத் துரிதமாக வளம்படுத்திக் கொள்ளலாம்.

விண்ணப்பங்கள் பெயர், முகவரி, தொழில் விபரங்களுடன் கீழே தரப்பட்டுள்ள யாழ் இந்துக்கல்லூரி முகவரிக்கு 07-09-1991ற்கு முன் அனுப்பப்படவேண்டும். தபால் உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''TACEP'' என குறிப்பிட்டு தெரிந்தெடுக்கும் நிலையத்தின் பெயரையும் குறிப்பிடுக.

இந்தத்திட்டத்திற்கான தகுதிகாண் பரீட்சை 14-09-91இல் (சனிக்கிழமை) காலை 9 00மணிக்கு யாழ். இந்துக்கல்லூரியில் நடைபெறும். (இதற்குரிய கட்டணமாகிய ரூபா 20/- உடன் செலுத்தப்படவேண்டும் )

நா. தேவபாலசிங்கம்
மாநில இணைப்பாளர்
'TACEP' மத்திய நிலையம்,
யாழ். இந்துக்கல்லூரி,
யாழ்ப்பாணம்.

பயிற்சி நிலையங்கள்

1. யாழ். இந்துக்கல்லூரி யாழ்ப்பாணம் (மத்திய நிலையம்)
2. வேம்படி மகளிர் கல்லூரி (பாடசாலையிலிருந்து வெளியேறிய மாணவர்களுக்கான விசேட நிலையம்)
3. செங்குந்தா இந்துக்கல்லூரி, கல்வியங்காடு
4. சோமஸ்கந்தாக் கல்லூரி, புத்தூர்
5. இராமநாதன் மகளிர் கல்லூரி, மருதனாமடம்
6. அருணோதயாக் கல்லூரி, அளவெட்டி
7. விக்னேஸ்வரா மகாவித்தியாலயம், கைதடி

(R/1687)


## 1-ம் ஆண்டு வீர அஞ்சலி



# பிரேமதாசா கருத்துக்கணிப்பு நடத்துவது சந்தேகமே -- சிறிமா

(கொழும்பு)

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சி முறையை நீக்க மக்களிடையே கருத்துக் கணிப்பு நடத்த இருப்பதாக வெளியிட்ட அறிவிப்பை பிரதான எதிர்க்கட்சியான சிறிலங்கா சுதந்திரக் கட்சி உட்பட பல எதிர்க் கட்சிகள் வரவேற்பதாகவும் ஆனால் கருத்துக் கணிப்பொன்றை பிரேமதாசா நடத்துவார் என்பதும் சந்தேகமே.

நேற்றுக் கொழும்பில் செய்தியாளர்களிடையே பேசிய எதிர்க்கட்சித் தலைவி சிறிமாவோ பண்டாரநாயக்கா இவ்வாறு தெரிவித்தார்.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சி முறையைச் சிறிலங்கா சுதந்திரக் கட்சி எப்போதுமே எதிர்த்து வந்திருக்கிறது என்றும் கூறினார்.

ஜனாதிபதி ஆர். பிரேமதாசா ஜனாதிபதிப் பதவியை ஓராளவிற்குச் சர்வாதிகாரப் பதவியாகவே மாற்றி அமைச்சர்களையும், பாராளுமன்ற உறுப்பினர்களையும் புறக்கணித்து மட்டம் தட்டி விட்டார் என்று சிறிமாவோ பண்டாரநாயக்கா கருத்து வெளியிட்டார்.

அவர் மேலும் பேசுகையில் பாராளுமன்றத்தில் பிரேமதாசா அரசு பெரும்பான்மையை இழந்துவிட்டதாலேயே பாராளுமன்றத்தைக் கூட்ட அஞ்சுவதாகவும், இரகசியவாக்கெடுப்புநடத்தப்படுமானால் கண்டனத் தீர்மானம் வெற்றி பெறுமெனவும் தெரிவித்தார் அத்துடன் ஈ. பி. ஆர். எல் எப், நவசமசமாஜக் கட்சி ஐக்கிய சோசலிசக் கூட்டணி, மக்கள் ஐக்கிய முன்னணி போன்ற கட்சிகளும் கண்டனத் தீர்மானத்தை ஆதரிப்பதாகவும் கூறினார்.

மேலும் சிறிலங்காவின் எதிர்க்கட்சிகள் மக்களாதரவைத் திரட்டுமுகமாக ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒவ்வொரு பொதுக் கூட்டத்தை நடத்த திட்டமிட்டுள்ளன.

எதிர்க்கட்சிகளின் கருத்துகளுக்கு வானொலி, தொலைக்காட்சி என்பவற்றில் இருட்டடிப்பு செய்யப்படுவதால் இதைத் தவிர வேறு வழியில்லை என்றும் சிறிமாவோ பண்டாரநாயக்கா கூறியுள்ளார்.

பிரேமதாசா அரசாங்கம் வானொலி, தொலைக்காட்சி ஆகியவற்றைப் பயன்படுத்தும் விதம் அவமானத்திற்கு உரியது என்றும், சுவரொட்டிகளை ஒட்டி அரசாங்கம் ஆதரவு தேடுவது வெட்கக் கேடானது என்றும் சிறிமாவோ குறை கூறியுள்ளார்.

## ஹட்டனில் ஆயுதம் மீட்பு ஒன்பது தமிழர் கைது

(கொழும்பு)

ஹட்டனை அடுத்துள்ள வட்டவளைப் பகுதியில் மறைவிடம் ஒன்றில் இருந்து இரு சப்மெசின்கள், துப்பாக்கிகள் ஒரு கைக்குண்டு இரண்டு மகசீன் முதலானவற்றை பொலிசார் கைப்பற்றியுள்ளனர் என்று சிறிலங்காமுப்படை தலைமையக அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

மேற்படி ஆயுதங்கள் தொடர்பாக ஒன்பது பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும் அந்த அதிகாரி தெரிவித்தார்.

இந்த ஒன்பதுபேரும்ஈரோஸ் இயக்க உறுப்பினர்களாக இருக்கலாம் என தாம் நம்புவதாகவும் அந்த அதிகாரி தெரிவித்தார்.

## "கலைஞானம்" வெளியீடு

யாழ். பல்கலைக்கழக கல்விக் கழகம் "கலை ஞானம்" என்ற சஞ்சிகை ஒன்றினை வெளியிடவுள்ளது.

நாளை ஆறாம் திகதி வெளியிடப்படவுள்ள இச்சஞ்சிகை பல்கலைக்கழகப் பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள் மற்றும் கல்வியியல் ஆய்வாளர்களின் ஆக்கங்களைத் தாங்கி வெளிவருகின்றது.

இதன் வெளியீட்டு விழா

## தமிழர் தாயகம்

பகடைக் காய்களாக வைத்தே அரசியல் சதுரங்க ஆட்டம் நடைபெறுகிறது. தமிழ் நாட்டு மக்களை எமது இயக்கத்திற்கு எதிராகவும், எமது சுதந்திர போராட்டத்திற்கு எதிராகவும் திருப்பி விட இந்திய மத்திய அரசும், தமிழக அரசும் திட்டமிட்டு செயற்படுகின்றன. எமது இயக்கத்திற்கு அவப்பெயரை ஏற்படுத்தி திட்டமிடப்பட்ட முறையில் விஷமப் பிரசாரம் மேற்கொள்ளப்படுகின்றது. எனினும் தமிழ் நாட்டில் பரந்துபட்ட மக்கள் எமதுஇயக்கத்திற்கும், போராட்டத்திற்கும் ஆதரவாகவே இருக்கிறார்கள் இந்த மக்களின் ஆதரவு இருக்கும்வரை எமது போராட்டத்திற்கு பாதிப்பு ஏற்படப் போவதில்லை

## எமக்குத் தொடர்பில்லை

★ கேள்வி: ராஜீவ் காந்தி கொலையுடன் புலிகளுக்கு தொடர்பில்லை எனக் கூறப்படுவதை நாம் அறிவோம். என்றாலும் இந்திய புலனாய்வுக் குழு நீங்கள்தான் இதற்குப் பொறுப்பு எனத் திடமாக நம்புவது போல் தெரிகிறது. இருகிட்டு பிரிட்டனை விட்டு வெளியேற்றப்பட்டுள்ளார் அனைத்துலக அரங்கின் உணர்வலைகள், கருத்துக்கள் உங்களுக்கு எதிராக மாறுவதாக கவலைப்படுகிறீர்களா?

பதில்: ராஜீவ் காந்தியின் கொலைக்கும் எமது இயக்கத்திற்

## மாவீரர்களுக்கு அஞ்சலி

மணலாறு மாவட்டத்தில் கடந்த ஞாயிறன்று நடந்த நேரடி மோதலில் வீரமரணமடைந்த குரு (வைத்திலிங்கம் வசீகரன், குப்பிளான்), விஸ்வம், (வீரசிங்கம் சிவராஸ் கோண்டாவில்), கவாஸ்கர், (கனகசபை சுமித்திரன், சிறுப்பிட்டி) ஆகிய வீர வேங்கைகளின் புகழுடல்கள் நேற்று முன்தினம் மாலை ஐந்து முப்பது மணியளவில் சிறுப்பிட்டி ச. ச. நிலையத்தில் அமைக்கப்பட்ட விசேட மேடையில் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டது.

அங்கு நடந்த அஞ்சலிக் கூட்டத்திற்கு கோப்பாய் வட்டவைப் பொறுப்பாளர் திரு. விமல் தலைமை தாங்கினார் தலைமைச் செயலக மக்களுறவு கொள்கை முன்னெடுப்பு பிரிவு உறுப்பினர் திரு. தனம் மகளிர் முன்னணியைச் சேர்ந்த செல்வி சங்கீதா ஆகியோர் அஞ்சலியுரை நிகழ்த்தினர். பெருமளவு மக்கள் கலந்துகொண்ட அஞ்சலிக் கூட்டத்தின் பின்னர் மாவீரர்களின் புகழுடல்கள் கோப்பாயில் மாவீரர் துயிலும் புனித இல்லத்தில் புதைகுழியில் அடக்கம் செய்யப்பட்டது

★ ★ ★

(கொடிகாமம்)

நேற்று முன்தினம் மணலாறு மாவட்டத்தில் சிறிலங்கா இராணுவத்தினருடன் ஏற்பட்ட நேரடி மோதலில் வீரமரணமடைந்த வீரவேங்கை டெனி(செல்வராசா சுதர்சன், மீசாலை தெற்கு, மீசாலை) இனின்புகழுடல் நேற்று தன் கிழமை முற்பகல் 11 மணியளவில் மீசாலை வடக்கு, கொடிகாமத்திலுள்ள நெசவு நிலையத்தில் மக்களின் அஞ்சலிக்காக வைக்கப்பட்டபோது பெரும் திரளான பொதுமக்கள், மாணவர், மாணவிகள் புகழுடலுக்கு அஞ்சலிசெலுத்தினர்.

இதன்பின்பு தென்மராட்சி நிழல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு.விமல் மாஸ்ரர் தலைமையில் அஞ்சலிக் கூட்டம் நடைபெற்றது. இந்த அஞ்சலிக் கூட்டத்தில் சாவகச்சேரி வட்டப் பொறுப்பாளர் திரு. ஜெயா மகளிர் முன்னணியைச் சேர்ந்த செல்வி சங்கரி, முருகேசுமாஸ்ரர் ஆகியோர் அஞ்சலியுரை நிகழ்த்தினர்.

## 1-ம் ஆண்டு வீர அஞ்சலி



## வீரவேங்கை லிங்கேஸ்
## (வெள்ளத்தம்பி சதீஸ்குமார்)

சாம்பல்தீவு (திருமலை)

| வீரஜனனம் | வீரமரணம் |
|---|---|
| 1972-04-08 | 1990-09-01 |

மண்ணுக்காய் மரணித்த வீரர்களில்
நீயும் ஒருவனானாய்
விண்ணுலகம் நீ சென்றாலும் எம் நெஞ்சில்
உன் திருவுருவம் விட்டகலவில்லை
ஓராண்டு காலம் கடந்தோடி விட்டது
ஆனால் உன் கனவு நனைவாகி வருகிறது
முல்லைமுகாம் தகர்ப்பில் முத்தமிட்டாய் தாய்மண்ணை
தமிழீழ மண்ணில் மீண்டும் பிறப்பாய் புலிவீரனாய்!

தடையிற்காடு,
வேம்போடு ராணி,
பளை. (R-1706)

உன் பிரிவால் துயருறும்
அப்பா, அம்மா, தங்கையர்
தம்பி, நண்பர்கள்

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31 ஆம் இலக்கத்திலுள்ள ''ஈழநாதம்'' பணிமனையில் 1991 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 05 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப் பட்டது.

## ''கலைஞானம்'' வெளியீடு

யாழ். பல்கலைக்கழக கல்விக் கழகம் ''கலை ஞானம்'' என்ற சஞ்சிகை ஒன்றினை வெளியிடவுள்ளது.

நாளை ஆறாம் திகதி வெளியிடப்படவுள்ள இச்சஞ்சிகை பல்கலைக்கழகப் பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள் மற்றும் கல்வியியல் ஆய்வாளர்களின் ஆக்கங்களைத் தாங்கி வெளிவருகின்றது.

இதன் வெளியீட்டு விழா பிற்பகல் 2-30 மணிக்கு பல்கலைக்கழக பேராசிரியர் செல்வநாயகம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

## பாதுகாப்புக் குறித்து கலந்துரையாடல்

யாழ்ப்பாணம் பலநோக்குக் கூட்டுறவுச்சங்க தலைமை அலுவலகத்தில் இன்று மாலை 3மணிக்கு அவசர, அவசிய கலந்துரையாடல் ஒன்று நடைபெறவுள்ளது.

சகலகிளைகளின் பாதுகாப்பு நடவடிக்கை தொடர்பாக நடைபெறவுள்ள இக்கலந்துரையாடலில் கிளைக்குழுத் தலைவர், செயலாளர் ஆகியோரைத் தவறாது சமுகமளிக்குமாறு இதன் செயலாளர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

### மணலாற்றில்

விமானப்படை விமானங்களும், கடற்படைக் கப்பல்களும் கடற்கரை குடியிருப்புகள் மீதும், காட்டுப் பகுதியிலும் தொடர்ந்தும் குண்டு வீச்சுத் தாக்குதலை மேற்கொண்டுள்ளன. செம்மலை, குமுளமுனைப் பகுதிகள் குண்டுவீச்சினால் பெரும்பாதிப்பிற்கு உள்ளாகியுள்ளன.

அதேவேளை இம் மோதல் பற்றிய செய்திகளை வெளியிட வேண்டாம் என சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் அதிகாரிகளுக்குக் கட்டளை இட்டுள்ளதாக ஏஜென்சி செய்திகள் தெரிவிக்கின்றன.

பிரசாரம் மேற்கொள்ளப்படுகின்றது. எனினும் தமிழ் நாட்டில் பரந்துபட்ட மக்கள் எமதுஇயக்கத்திற்கும், போராட்டத்திற்கும் ஆதரவாகவே இருக்கிறார்கள் இந்த மக்களின் ஆதரவு இருக்கும்வரை எமது போராட்டத்திற்கு பாதிப்பு ஏற்படப் போவதில்லை

## எமக்குத் தொடர்பில்லை

★ கேள்வி: ராஜீவ் காந்தி கொலையுடன் புலிகளுக்கு தொடர்பில்லை எனக் கூறப்படுவதை நாம் அறிவோம். என்றாலும் இந்திய புலனாய்வுக் குழு நீங்கள்தான் இதற்குப் பொறுப்பு எனத் திடமாக நம்புவது போல் தெரிகிறது. இருகிட்டு பிரிட்டனை விட்டு வெளியேற்றப்பட்டுள்ளார் அனைத்துலக அரங்கின் உணர்வலைகள், கருத்துக்கள் உங்களுக்கு எதிராக மாறுவதாக கவலைப்படுகிறீர்களா?

பதில்: ராஜீவ் காந்தியின் கொலைக்கும் எமது இயக்கத்திற்கும் எதுவித சம்பந்தமுமில்லை. இந்தக்குற்றச்சாட்டு இன்னும் நிரூபிக்கப்படவில்லை இந்தக் கொலைக் குற்றச்சாட்டை எம் மீது சுமத்தி சர்வதேச ரீதியாக எம்மைக் களங்கப்படுத்த இந்திய அரசு முயற்சிக்கின்றது, கிட்டுவின் விவகாரத்தில் பிரிட்டன் அரசு நடந்து கொண்ட விதம் எமது மக்களுக்கு பெரும் ஏமாற்றத்தையும் கொடுத்துள்ளது வைத்திய சிகிச்சைக்காக லண்டன் செல்ல பிரித்தானிய தூதுவரகமே அனுமதி அளித்திருந்தது.கிட்டு ஒரு அங்கவீனர். ஒடுக்கப்பட்ட தமிழ் மக்களின் பிரதிநிதி என்று தெரிந்தும் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டது மிகவும் பொறுப்பு அற்றதும், மனிதாபிமான மற்றதுமான செயலாகும்.

## பெரிய அரசியல் அமைப்பு

★ கேள்வி; விடுதலைப்புலிகள் அரசியல் கட்சியொன்றை அமைத்திருந்தும் கூட புலிப்படையினர் முக்கியமாக ஒரு ஈவு இரக்கமற்ற இராணுவ அமைப்பு என எதிர்த்துக் குரல் எழுப்புவோர் கூறுகின்றனர். உங்கள் இயக்கத்தின் அரசியல் பங்கு பணிபற்றிக் கூறமுடியுமா?

பதில்: அப்படிச் சொல்வது முற்றிலும் தவறு. நாம் பிரமாண்டமான அரசியலமைப்பை கட்டி எழுப்பியுள்ளோம். எமது மக்களிடையே சிவில் நிர்வாகம், உணவுற்பத்தி நிவாரணம், சமூகசேவை, அகதிகள் சேவை போன்ற விடயங்களை எமது அரசியல் பிரிவே கவனித்து வருகின்றது. எமது பகுதிகளிலுள்ள மக்களின் அன்றாட வாழ்வில் எங்களுடைய இயக்கம் பெருமளவு பங்குவகித்து வருகிறது என்பதுதான் உண்மை.

## அவதானித்து வருகிறோம்

★ கேள்வி: கொழும்பில் பிரேமதாசா ஆட்சிக்கு ஏற்பட்டிருக்கும் நெருக்கடி பற்றி உங்கள் கருத்து என்ன?

பதில்: நிலைமையை நாம் அவதானித்து வருகிறோம். இப்போது இதுபற்றி அபிப்பிராயம் எதுவும் கூறமுடியாது

## பேச்சுக்கு எப்பவும் தயார்

★ கேள்வி: விடுதலைப் புலிகளுக்கும், இலங்கை அரசுக்கும் இடையே மீண்டும் பேச்சுவார்த்தை ஆரம்பிக்க முயற்சிகள் கடந்த சில மாதங்களாக நடந்து வருகின்றன அடுத்த சில மாதங்களில் இப்படியான முயற்சிகள் வெற்றி அடைவதற்கான வாய்ப்புகள் உண்டு என நீங்கள் கருதுகிறீர்களா?

பதில்: நாம் எப்போதுமே சமாதானப் பேச்சுகளுக்கு தயாராக இருக்கிறோம் என்பதை கூறிவருகிறோம். பேச்சுகள் நிபந்தனையற்றதாக இருக்க வேண்டும் என்பதைத்தான் நாம் வலியுறுத்தி வருகிறோம்.

பெரும் திரளான பொதுமக்கள், மாணவர், மாணவிகள் புகழுடலுக்கு அஞ்சலிசெலுத்தினர்.

இதன்பின்பு தென்மராட்சி நிழல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு.விமல் மாஸ்ரர் தலைமையில் அஞ்சலிக் கூட்டம் நடைபெற்றது. இந்த அஞ்சலிக் கூட்டத்தில் சாவகச்சேரி வட்டப் பொறுப்பாளர் திரு. ஜெயா மகளிர் முன்னணியைச் சேர்ந்த செல்வி சங்கரி, முருகேசுமாஸ்ரர் ஆகியோர் அஞ்சலியுரை நிகழ்த்தினர்.

இதன்பின்பு இவரின் புகழுடல் ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டு கொடிகாமம் மாவீரர் மயானத்தில் தீயுடன் சங்கமமாக்கப்பட்டது. (86)

★ ★ ★

மேஜர் ரஞ்சன் நினைவுச் சிறுவர் பூங்கா, வடமராட்சி மாவீரர் நடுகல் கோட்டத் திறப்பு விழாவும், எழுச்சிக் கூட்டமும் நாளை (06 9-91) பருத்தித்துறையில் நடைபெறவுள்ளது.

நாளை மாலை 5 மணிக்கு மேஜர் ரஞ்சன் நினைவுப் பூங்கா திறந்து வைக்கப்படவுள்ளது

மாலை 5 30 மணிக்கு மாவீரர்களின் படங்களுக்கு அவர்களதுபெற்றோர் மாலை அணியும்நிகழ்ச்சி நடைபெறும் மாலை 6 மணிக்குப் பருத்தித்துறை பழைய நகரத்தில் நடைபெறும் எழுச்சிக் கூட்டத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளின் உறுப்பினர்கள் கலந்து கொண்டு உரையாற்றுவார்கள். (36)

★ ★ ★

மணலாற்றில் சிறிலங்கா இராணுவத்துடனான நேரடி மோதலில் வீரமரணமடைந்த குரு (குப்பிளான், யாழ்ப்பாணம்) வின் புகழுடல் கடந்த திங்கட்கிழமை மாலை 3·00 மணியளவில் முல்லைத்தீவு மாவீரர் மண்டபத்தில் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டது

முல்லைத்தீவு அளம்பில் செம்மலை மக்களுடன் ஒன்றிப் பழகிய குருவின் புகழுடலுக்கு பெருந்தொகையான மக்கள் கண்ணீர் அஞ்சலி செலுத்தினர்,